சுங்கத்துறை அலுவலகம்,
மணமேல்குடி.

கைபேசி தொடர்பு எண்கள் :
94432 46239 / 97907 50597

# ஊர் தலைவர்கள் / மீனவ நண்பர்கள் மற்றும் பொதுமக்களுக்கான சுங்கத்துறையின் (மணமேல்குடி தாலுகா) வேண்டுகோள்.

சமீக காலமாக மணமேல்குடி தாலுகாவுக்கு உட்பட்ட கடற்கரை கிராமங்களைச் சேர்ந்த சிலர் சில வெளி ஆட்களுடன் சேர்ந்து தங்கக் கடத்தலில் ஈடுபடலாம் என்று வந்த துப்பு செய்தியை முன்னிட்டு, பொதுமக்களின் நலனுக்காக கடத்தல் மற்றும் அது சம்பந்தமான சட்டப்படியான தண்டனைகள் குறித்து தாங்கள் விழிப்புடன் இருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

சுங்கத்துறையின் கீழ்கண்ட செய்தி / அறிவுரைகளை ஏற்று தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களையும் **கடத்தல் ஆட்களின் பொறியில் சிக்காமல் விழிப்புடன் இருக்குமாறு நல்லுரைக்கப்படுகிறார்கள்.**

தங்களின் அடிப்படை சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு தங்கம் ஏன் இந்தியாவுக்குள் கடத்தப்படுகிறது? தமிழகத்தில் வான்வழி மற்றும் கடல்வழி கடத்தல் எவ்வாறு நிகழ்கிறது? இக்குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைய தலைமுறையினரின் வாழ்க்கை எப்படி சிறைகளில் வீணாகிறது? இக்குற்றச்செயல்களுக்கு துணை புரிவோர் எவ்வாறு தண்டிக்கப்படுகிறார்கள்? பொதுமக்கள் தங்களையும், தங்களைச் சார்ந்தோர்களையும் எவ்வாறு இதுகுறித்து விழிப்புணர்வுடன் இருப்பது என்பது போன்ற தகவல்களை நீங்கள் இந்த பிரசுரம் மூலமாக அறியலாம்.

## தங்கம் ஏன் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு கடத்தப்படுகிறது?

இந்தியாவைப் பொறுத்தமட்டில் சில அயல்நாடுகளை ஒப்பிடும்பொழுது தங்கத்தின் தேவை மற்றும் விலை இங்கு மிக அதிகம் என்பதாலும், அதிகபட்ச இறக்குமதி வரி 36% மேல் என்பதாலும், வரி செலுத்தினாலும் ஒரு குடிமகனுக்கு 1 கிலோவுக்கு மேல் தங்கம் கொண்டு வர அனுமதி இல்லை என்பதாலும், அளவில் சிறியதாக இருப்பதால் எளிதில் மறைத்து கொண்டு வரலாம் என்ற எண்ணத்தாலும், இந்திய கடல் பிராந்தியத்தின் வழியாக மீனவர்கள் என்ற போர்வையிலும், திருச்சி போன்ற பன்நாட்டு விமான முனையங்களில் பயணிகள் என்ற போர்வையிலும் இத்தகு சட்டவிரோத செயலை கடத்தல் பேர்வழிகள் பணத்துக்கு ஆசைப்பட்டு, தாங்களோ அல்லது தனது நம்பிக்கையான ஆட்கள் மூலமாகவோ செய்கின்றனர். எனினும் இப்பேர்வழிகள் பெரும்பாலும் தனது முதல் முயற்சிலேயே சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்கின்றனர்.

## கடல் வழியாக தமிழகத்தில் எவ்வாறு கடத்தல் நிகழ்கிறது?

Scanned by CamScanner

தென்தமிழகத்தில் மிக அருகில் இருக்கும் இலங்கையிலிருந்து மட்டுமே தங்கக் கடத்தல் நடைபெறுகிறது. பெரும்பாலும் தமிழ் மற்றும் சிங்களம் அறிந்த நபர்கள் (கொழும்புவில்) தங்கம் விற்கும் மற்றும் தங்கம் வாங்கும் (இந்தியர்) நபர்க்கு கடத்தல் ஏஜண்டுகளாக செயல்பட்டு கமிஷனுக்காக இவ்வேலையை செய்கின்றனர். இலங்கையிலிருந்து மிக துரித நேரத்தில் எளிதில் வந்து சேரக்கூடிய தமிழக கரை இலக்குகளை குறிவைத்து சிறிய ரக மோட்டார் விரைவு படகுகள் கொண்டு இச்செயலை செய்கின்றனர். இவர்களுக்கு உள்ளூரில் உதவ ஆட்களையும் கூட்டு சேர்த்துகொள்கின்றனர். கடல் ரோந்தில் ஈடுபட்டிருக்கும் நேவி, கடலோர காவல்படை ஆகியோர் கண்களில் சிக்காவண்ணம், அதேநேரத்தில் கடற்கரை கிராம மக்களுக்கும் சந்தேகம் வராத வண்ணம் இவர்கள் செயல்பாடு இருக்கும். அதேநேரத்தில் கடற்கரை ரோந்தில் இருக்கும் சுங்கத்துறையினருக்கும் தெரியாவண்ணம் மிகத்துரிதமாக அருகில் உள்ள தங்கள் மறைவிடத்திற்கு சென்று விடுவர். சில சமயம் இலங்கையிலிருந்து விரைவு மோட்டார் படகில் தங்கத்தை மறைத்து கொண்டு வந்து அவர்களுக்கென்று காத்துக் கொண்டிருக்கும் இந்திய எல்லையிலிருந்து சென்ற மீன்பிடி படகை ஒத்த ஒரு படகில் காத்திருக்கும் ஏஜண்டிடம் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் தங்கத்தை கொடுத்துவிட்டு விரைந்து திரும்பிவிடுவார்கள். தங்கத்தைப் பெற்றுக்கொண்ட படகில் உள்ள நபர் / நபர்கள் மீனவர் போர்வையில் கரை திரும்புவர். இவ்வாறாக கடத்தப்பட்ட தங்க கட்டிகள் வேறு வழிகளில் மறைந்து வைத்து ரோடுவழியாக தமிழகத்தின் பிற பகுதிகளில் உள்ள அதன் இலக்குகளை கடத்தல் பேர்வழிகள் மூலமாக சென்றடைகிறது. இச்சமயத்தில்தான் பெரும்பாலான கடத்தல் தங்கம், சுங்கம் மற்றும் வருவாய் புலனாய்வு அதிகாரிகளால் மிகுந்து கண்காணிப்பிற்கு பிறகு கைப்பற்றப்படுகிறது. இதன் பிறகு **கடத்தலில் தொடர்புடைய நபர்கள் அனைவரும் சுங்க விதிகளின்படி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன்படி கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அதற்கான சுங்கவரி வசூல் செய்யப்படுகிறது. மேலும் சுங்க விதிகளின்படி செய்த செயலுக்காக சிறை தண்டனை அல்லது அபராதம், அல்லது இரண்டும், குற்ற செயலின் தன்மையைப் பொறுத்து அளிக்கப்படுகிறது. இதன் காரணமாக கடத்தல் என்ற குற்றச் செயலில் ஈடுபடும் தனிநபர் மட்டுமின்றி அவரை நம்பியுள்ள அவரது குடும்பத்தினரும் சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளாகின்றனர்.**

**வான்வழி கடத்தல் எவ்வாறு நிகழ்கிறது?**

தமிழகத்தில் சென்னைக்கு அடுத்தபடியாக திருச்சி விமானநிலையமே அதிக எண்ணிக்கையிலான பன்நாட்டுப் பயணிகளை கையாளுகிறது. திருச்சியைத் தவிர மதுரை மற்றும் கோயம்புத்தூர் விமானநிலையங்களில் சில பன்னாட்டு பயணிகள் வந்து செல்கின்றனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் பெரும்பாலும் ஏஜண்டுகள் மூலமாக வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்கின்றனர். இவர்களில் பலர் ஏழை குடும்பத்திலிருந்து

Scanned by CamScanner

வறுமை காரணமாக கூலித் தொழிலாளிகளாக துபாய், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு செல்பவர்கள் ஆவர். அவ்வாறு செல்பவர்கள் சில மாதங்கள் கழித்து விடுமுறை எடுத்து தன் குடும்பத்தாரை சந்திக்க சொந்த ஊர் செல்ல விமான டிக்கெட் எடுத்து வைத்திருப்பார்கள். இவர்கள் பிரயாணம் செய்வதற்கு முன் தன்னுடன் பழகிய நண்பராலோ முக்கியமாக டிராவல் ஏஜண்டாலோ அல்லது ஏர்போர்ட்டில் அறிமுகம் செய்து கொண்டு இனிமையாக பேசுகின்ற ஒரு நபராலோ `எனக்கு ஒரு சிறிய உதவி செய்யுங்கள். நான் தரும் இந்த பார்சலை திருச்சி விமான நிலையத்தின் வருகை வாயிலில் காத்திருக்கும் உறவினர் ஒருவரிடம் கொடுத்து விடுங்கள்' என்று சொல்லி தங்கக் கட்டியை லாவகமாக மறைத்து ஏதாவது ஒரு விளையாட்டு பொம்மை மற்றும் எமர்ஜென்சி லேம்ப் போன்ற ஒரு உபகரணத்துள் அல்லது சாக்லேட் உணவுகள் அடங்கிய பாக்கெட் மற்றும் உணவுப் பொருட்களில் மறைத்து வைத்து பார்சலாக கொடுத்து விடுவார்கள். "வாட்ஸ் அப்பில் உங்கள் புகைப்படத்தை என் உறவினரின் கைப்பேசிக்கு அனுப்பி விடுகிறேன். விமான நிலைத்தில் இருந்து வெளியே வந்தததும் உங்களைத் தொடர்பு கொண்டு பார்சலை பெற்றுக் கொள்வார்கள். மேலும் அங்கிருந்து சொந்த ஊர் செல்ல வழிச்செலவுக்கு பணமும் தருகிறேன்" என்று சம்மதிக்க வைப்பார்கள். உதவி **செய்வதாக எண்ணிக்கொண்டு அப்பாவிகள் இது போன்ற பொறியில் அதிகம் சிக்குகின்றனர்.** இந்தியா வந்து அடைந்ததும் விமான நிலைய சுங்க சோதனையில் சிக்கும்போதுதான் தான் ஏமாற்றப்பட்டோம் என்று உணர்வார்கள். ஆனால் சட்ட விதிகளின்படி **நீங்கள் எச்சரிக்கையாக இல்லாமல் செய்த செயல் "தங்கத்தை மறைத்துக் கடத்தியது" என்று நிரூபணம் ஆனதால், சுங்க விதிகளின் படி தண்டிக்கப்படுவீர்கள்.** இந்த தவறை பணத்திற்காக தெரிந்தே செய்பவர்களும் உண்டு. இவர்கள் பெரும்பாலும் ஆசன வாயில் தங்கத்தை அடைத்துக் கொண்டு வருவார்கள். அல்லது வேறு சில யுக்திகளை கையாளுவார்கள். ஆனால் குடியுரிமை சோதனை முடிந்து சுங்கத்துறை வாயிலின் எக்ஸ்ரே, ஸ்கேன் வாயிலாககடந்து வரும்போது, இவற்றிலிருந்து வரும் சத்தம் அவர்களை காட்டிக் கொடுத்துவிடும். சென்னை, திருச்சி போன்ற பன்னாட்டு விமான நிலையங்களில், இது ஒரு தினசரி நிகழ்வாகவே பார்க்கப்படுகிறது. **இக்குற்றத்தை செய்பவர்ளுக்கு சுங்க விதிகளின்படி கடல்வழியாக கடத்தி மாட்டிக் கொண்டவர்களுக்கு அளிக்கப்படுவது போலவே சிறைத்தண்டனை, அபராதம் மற்றும் வரிவசூல் செய்யப்படுகிறது. சிலசமயம் பாஸ்போர்ட் முடக்கப்பட்டு மீண்டும் அயல்நாடு சென்று வேலை செய்ய இயலாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.**

அயல்நாடுகளில் இருந்து வருபவர்களிடம் தங்கம் அடங்கிய பார்சலை மறைத்துக் கொடுப்பது போல இங்கிருந்து அயல்நாடு செல்ல முற்படும்போது போதை மருந்து அடங்கிய பார்சலை, மளிகைப் பொருள், நாட்டு மருந்து என்றெல்லாம் கூறி மேற்கூறிய அதே யுக்திகள் மூலமாக பயணியை கவர்ந்து ஏமாற்றிக் கொடுத்து விடுவார்கள். மேற்கூறியவாறு போலவே

Scanned by CamScanner

உதவி செய்வதாக எண்ணிக்கொண்டு, பயணியும் சிலசமயம் பார்சல்களை வாங்கிக் கொள்வார்கள். உடமைகளை சோதனைக்கு உள்ளாக்கப்படும்போதுதான் தான் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்று உணர்வார்கள்.

போதை மருந்து கண்டுபிடிக்கும் பரிசோதனைகள் ஒருமுறைக்கு இருமுறை செய்து சந்தேகம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதும், சுங்க மற்றும் போதை மருந்து மற்றும் மனம் மயக்கும் வஸ்துகள் (NDPS) விதிகளின்படி பயணியிடம் வாக்குமூலம் பெற்று, கோர்ட்டில் நீதிபதி முன்பு ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்படுவர். இத்தகைய குற்றங்களுக்கு ஜாமீன் கிடையாது. **குற்றம் நிரூபிக்கப்பட்ட பின் கவனமின்மையினால் தான் செய்த தவறு குற்றமாக சட்டத்தினால் பார்க்கப்பட்டு பலவருட சிறை தண்டனையை அனுபவிக்க நேரிடுகிறது**. வெகு சிலர் இத்தகு சோதனையிலிருந்து தப்பி சிங்கப்பூர், துபாய், மலேசியா போன்ற நாடுகளுக்கு பயணித்து அங்குள்ள சுங்க சோதனையில் மாட்டிக் கொண்டால் அந்த நாட்டு சட்டங்களின்படி அந்த நபர் மரண தண்டனையை மட்டும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் போதை மருந்து கடத்துபவரை அந்நாடுகள் தன்நாட்டின் மீதும் தன் இறையாண்மையின் மீதும் மனித வளத்தின் மீதும் தனிநபர் நடத்தும் போராகவே கருதுகிறார்கள்.

இதுவரை கூறிய குற்றச்செயல்களில் வாலிபர்களே பெரும்பாலும் ஈடுபடுகின்றனர். ஆகவே, ஊர் தலைவராகவோ, பெற்றோர்களாகவோ, சகோதரனாகவோ அல்லது நல்ல நண்பராகவோ நீங்கள் இருக்கும் பட்சத்தில் மேற்கூறிய செயல்களின் விளைவுகளை உங்களுக்குள் பகிர்ந்து கொள்ளவும். படிக்கத் தெரியாதவர்களிடம் அவசியம் படிக்கத் தெரிந்தவர்களாகிய நீங்கள் எடுத்துச் சொல்லி **விழிப்புணர்வை உருவாக்குங்கள்.** அறியாமல் ஒரு குற்றச்செயலை செய்தாலும் சட்டத்தின் பார்வையில் அச்செயலை செய்தவர் குற்றவாளியே.

நிறைவு பகுதியில் நாங்கள் உங்களுக்கு அறிவுறுத்துவது என்னவென்றால் உங்கள் ஊரிலிருந்து மேற்கூறிய எந்தவொரு சம்பவமும் நிகழாவண்ணம் உங்களைப் பாதுகாத்துக் கொள்வது உங்கள் ஒவ்வொருவரின் கடமையாகும்.

மேலும் கடல்வழி தங்கக் கடத்தல் சம்பந்தமாக சந்தேகிக்கப்படும் நபர்கள் யாரேனும் உங்கள் ஊரில் தென்பட்டால் சந்தேகத்தை ஊர்ஜிதம்செய்து கொண்டு எங்களுக்கு உண்மைத் தகவலை நீங்கள் முதல் பக்கத்தில் கண்ட அலுவலக முகவரி மற்றும் கைபேசி எண்ணுக்கு அளிக்கலாம். தகவல் அளிப்பவர்களின் விபரம் ரகசியமாக பாதுகாக்கப்படும்.

இங்ஙனம்,

கண்காணிப்பாளர்

சுங்கத்துறை, மணமேல்குடி.

Scanned by CamScanner